Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.169/2020 Date: 12.02.2026
Deposition of witness for prosecution: PW12 ( LW15 )
Defence:
Court:

| Name | Dr. பிரதீப் | Caste | |
|---|---|---|---|
| Father Name | ஜெயபால் | Calling | குடிமை மருத்துவர் |
| Village | கம்பம் | Religion | இந்து |
| Taluk | உத்தமபாளையம் | Age | 44 /26 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 12.02.2026 TIME 12.10 PM

1, 2 எதிரிகள் ஆஜர். 3, 4–வது எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

1) நான் தற்போது கம்பம் அரசு மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.06.2019 ம் தேதி காலை 06.45 மணியளவில் நான் கம்பம் அரசு மருத்துவமனையில் பணியிலிருந்த போது, சுமார் 47 வயது மதிக்க தக்க சேத்துக்குலியை சேர்ந்த தம்பி மகன் ஜெயன் என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக வந்தார். அவர் என்னிடம் கூறியதாவது, அவர் தன்னை அடையாளம் தெரியாத 4 நபர்கள் கடந்த 06.06.2019 ம் தேதி காலை 05.00 மணியளவில் கம்பம் மெட்டு அடிவாரத்தில் வைத்து கைகள் மற்றும் மரக்கட்டையால் தாக்கியதாக கூறி, என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். நான் அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) வலது தோள்பட்டையில் சிராய்ப்பு காயங்கள் இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு அவரை வெளிநோயாளியாக பாவித்து சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிறு காயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று **அ.சா.ஆ.12** ஆகும்.

2) அதே நாள் காலை 06.50 மணியளவில் நான் கம்பம் அரசு மருத்துவமனையில் பணியிலிருந்த போது, சுமார் 40 வயது மதிக்க தக்க சேத்துக்குலியை சேர்ந்த ஜான் மகன் ரிஜு என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக வந்தார். அவர் என்னிடம் கூறியதாவது, அவர் தன்னை அடையாளம் தெரியாத 4 நபர்கள் கடந்த 06.06.2019 ம் தேதி காலை 05.00 மணியளவில் கம்பம் மெட்டு அடிவாரத்தில் வைத்து இரும்பு கம்பி மற்றும் மரக்கட்டையால் தாக்கியதாக கூறி, என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். நான் அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) அவருக்கு வலது முதுகில் கன்றிய காயம் 6x1x1 cm அளவில் இருந்தது. அவரை வெளிநோயாளியாக பாவித்து சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிறு காயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று **அ.சா.ஆ.13** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

3) ரிஜூ, ஜெயன் என்பவர்களின் விபத்து பதிவேட்டில் காயத்தின் தன்மை என்ற காலத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி இரு நபர்களுக்கும் ஒரு காயம் என்றால் சரிதான். போலிசார் விசாரணையின் போது ஜெயன் என்பவருக்கு தலை, வலது கை, தோள்பட்டை ஆகிய மூன்று இடங்களில் காயம் இருப்பதாக குறிப்பிட்டு சொன்னேனா என்றால் விபத்து பதிவேட்டில் இருப்பது போல் தான் சொன்னேன். ரிஜூ என்பவருக்கு இரு காயங்கள் இருப்பதாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. காயம்பட்டவர்கள் என்னிடம் இரும்பு கம்பி மற்றும் மரக்கட்டையால் தாக்கியதாக சொல்லியுள்ளார்கள் என்ற விபரத்தை சொன்னேன் என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.